# இலங்கையிலிருந்து வெளிவரும் தமிழ்த் தினசரிப் பத்திரிகைகளின் ஆசிரியத் தலையங்கங்கள் - ஓர் உள்ளடக்கப் பகுப்பாய்வு

Kiruththiga Tharumarajah, Kavithayini Sellaijah,

Media Studies Unit, University of Jaffna.

kiruththiraja@yahoo.com

**ஆய்வுச் சுருக்கம்**

உலகை எதிரொலிக்கும் ஆடியாக பத்திரிகைகள் இலத்திரனியல் ஊடகங்கள் மத்தியிலும் எதிரொலிக்கின்றன. பேனாவின் பலம் அதன் முக்கியத்துவம் இன்றுவரை எந்தவகையிலும் குறைந்து போய்விடவில்லை, உயர்ந்து நிற்கின்றது என்பதே யதார்த்தம்.

இலங்கையில் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் பத்திரிகைகள் வெளிவருகின்ற நிலையில் தமிழ்மொழிப் பத்திரிகைகளின் ஆசிரியத்தலையங்கங்களே இவ்ஆய்விற்காக எடுத்துக் கொள்ளப்பட்டன. இலங்கையிலிருந்து வெளிவரும் தமிழ்த் தினசரிப் பத்திரிகைகளான **வீரகேசரி, தினகரன், தினக்குரல், சுடரொளி, உதயன், வலம்புரி, தினமுரசு, யாழ்தினக்குரல்** ஆகியவற்றினை குறிப்பிடலாம். இப் பத்திரிகைகள் தம் ஆசிரியப்பீடக் கொள்கைகளை வெளிப்படுத்தும் களமாக ஆசிரியத் தலையங்கங்களையே பயன்படுத்துகின்றன.அவ் ஆசிரியத் தலையங்கங்களின் கட்டமைப்பினையும் உத்திமுறையினையும் ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பத்திரிகைகளில் பல்வேறு செய்திகள் இடம்பெற்றாலும் பத்திரிகை ஆசிரியர் வாசகர்களுடன் உரையாடும் அல்லது கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ளும் இடமாக ஆசிரியத் தலையங்கங்கள் விளங்குவதால் அவற்றை **“இதழ்களின் இதயம்”** என குறிப்பிடுகின்றனர். சமுதாயத்தில் நடைபெற்ற அல்லது நடைபெறப் போகின்ற நிகழ்ச்சி பற்றி பத்திரிகை ஆசிரியரோ, துணை ஆசிரியரோ அல்லது சிறப்பு ஆசிரியரோ எழுதுவதே ஆசிரியத்தலையங்கம் ஆகும். மக்களால் அதிகம் வாசிக்கப்படாத பகுதியாக விளங்கும் ஆசிரியத் தலையங்கங்கள் வாசிப்பவர்கள் மத்தியில் தனித்துவமும் செல்வாக்கும் மிக்கதாக விளங்குகின்றது.

இலங்கையிலிருந்து எட்டு தினசரிப் பத்திரிகைகள் வெளிவருகின்ற போதும் கொழும்பிலிருந்து வெளிவரும் தினக்குரல் பத்திரிகையின் ஆசிரியத் தலையங்கத்தையே யாழ்தினக்குரல் பத்திரிகையும் பிரசுரிப்பதனால் தினக்குரல் என்ற ஒரு பத்திரிகையாகவே ஆசிரியத் தலையங்கம் நோக்கப்பட்டுள்ளது.

இவ் ஆய்வினூடாக இலங்கையிலிருந்து வெளிவரும் தமிழ் தினசரிப் பத்திரிகைகளின் ஆசிரியத் தலையங்கங்கள் வெளிப்படுத்தும் கருத்து பற்றி ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இதனுள் அரசியல் (உள்நாடு, சர்வதேசம்) , சமயம் , தேர்தல், கல்வி, இலங்கை இந்தியா தொடர்பானவை, சமூகம் சார்ந்தவை, பொருளாதாரமும் அபிவிருத்தியும், குற்றமும் சட்டமும், சுற்றுச் சூழலும் சுகாதாரமும், பெண்கள் மற்றும் சிறுவர்கள், கலாச்சாரம், ஞாபகமூட்டல், உணவு, ஊடகமும் தொழில்நுட்பமும், விபத்து என 15 பிரிவாக பிரித்து பகுப்பாய்வு செய்யப்பட்டதனுள் அனைத்து பத்திரிகைகளும் அரசியல் என்ற விடயத்திற்கே அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

மேலும் ஆசிரியத் தலையங்கங்களில் கையாளப்பட்ட உத்திமுறைகள் பற்றிய பகுப்பாய்வில் ஒவ்வொரு பத்திரிகைகளும் தமது ஆசிரியத் தலையங்கங்களில் தமக்கென தனித்துவமான உத்தி முறைகளை கையாண்டு உள்ளமை ஆடி 2013 – மார்கழி 2013 வரையான 6 மாத காலப்பகுதிகளை உள்ளடக்கிய ஆய்வின் ஊடாக அவ்விடயங்கள் இனங்காணப்பட்டுள்ளது.

**ஆய்விற்கான திறவுச் சொற்கள்**

பத்திரிகை, ஆசிரியத்தலையங்கங்கள், உள்ளடக்கப் பகுப்பாய்வு, உத்திமுறை.

**ஆய்வு அறிமுகம்**

ஆட்கள் பதவி ஏற்பதிலிருந்து ஆட்சி மாறுவது வரையான சரித்திர மாற்றங்களை புரிவதில் வெகுஜன ஊடகங்களின் பங்கு காத்திரமானது. உலகைச் சுருக்கி உள்ளங்கைக்குள் வைத்திருக்கும் இலத்திரனியல் சாதனங்கள் மத்தியில் அச்சு ஊடகங்களின் செல்வாக்கும், பயன்பாடும் குன்றிவிடாது தொடர்ந்தும் முதன்மை பெறுகின்றமை கவனத்திற்குரியதாகும்.

வாக்குச் சீட்டுக்களால் தேர்ந்தெடுக்கப்படாத மக்களின் பிரதிநிதிகளாக பத்திரிகைகள் விளங்குகின்றன. **"ஆயிரம் வாள் முனைகளைக் காட்டிலும் ஒரு பேனா முனையைக் கண்டே நான் அஞ்சுகிறேன்"** என்று மாவீரன் நெப்போலியனும் **"பேனா முனை கத்தி முனையை காட்டிலும் வலிமையானது"** என்ற லிம்ரன் பிரபுவின் கருத்தும் **"ஒரு பத்திரிகையின் வரலாறு அனேகமாக அது வெளியிடப்பட்டு வரும் நாட்டின் வரலாறாகும்"** என்ற மாட்டின் வோக்கரின் கருத்தும், சமூகத்தில் நாட்டில் பத்திரிகைக்குள்ள பொறுப்பினை சுட்டிநிற்கின்றன.

பத்திரிகைகளின் இதயம் போன்றதான ஆசிரியத் தலையங்கம் சமூதாயத்தில் காணப்படும் ஏதேனும் சிக்கல் பற்றியோ, நடப்பு விடயம் பற்றியோ பத்திரிகையின் ஆசிரியர் தம் நிர்வாகம் கொண்டுள்ள கருத்துக்களை விளக்கி எழுதுவதாக அமையும். இவ்வாறு தனி ஒருவரால் ஆசிரியத் தலையங்கம் எழுதப்படுகின்ற போதும், அது பத்திரிகையின் கருத்தாகவே பிரதிபலிக்கும் என்பதுடன் ஆசிரியப்பீட கொள்கைகளை வெளிப்படுத்துவதாகவும் அமையும். இவ்வாறு எழுதப்படும் ஆசிரியத் தலையங்கங்கள் அரசை ஆதரித்தோ, கண்டித்தோ, அரசுக்கோ மக்களுக்கோ அறிவுரை கூறுவதாக அமையும்.

செய்திப் பத்திரிகைகளின் முக்கிய பணி செய்திகளை வெளியிடுவது என்றால் அதனோடு இணைந்த சமமுக்கியத்துவம் வாய்ந்த மற்றொரு பணி மக்கள் கருத்தை உருவாக்குவதாகும். பத்திரிகைகளில் இத்தகைய பணியானது ஆசிரியத் தலையங்கங்கள் மூலமாக நிறைவேற்றப்படுகின்றது.

**"தலையங்கம் இல்லா இதழ் முதுகெலும்பும் நாடும் இல்லா மனிதனையும் மறை, திரை இல்லா வீட்டினையும் ஒக்கும்"** என்ற வால்ட்ராப்பின் கருத்தும் **"தலையங்கம் பொதுமக்களுக்கு வழிகாட்டியாகவும் அவர்கள் கருத்தை எதிரொலிப்பதாகவும் இருக்க வேண்டும்"** என்ற டாக்டர் இராதகிருஷ்ணனின் கருத்தும் ஆசிரியத் தலையங்கத்திற்குள்ள பொறுப்பினையும், கடமையுணர்வையும் சுட்டி நிற்கின்றன.

அவ்வகையில் இவ் ஆய்வானது இலங்கையிலிருந்து வெளிவரும் தமிழ்த் தினசரிப் பத்திரிகைகளின் ஆசிரியத் தலையங்கங்களின் கருத்துக்களையும், உத்தி முறைகளையும் பற்றி ஆய்வு செய்வதாக அமைகின்றது.

**இலக்கிய மீளாய்வு**

இலங்கையிலிருந்து வெளிவரும் தமிழ்த் தினசரிப் பத்திரிகைகளின் ஆசிரியத் தலையங்கம் பற்றிய உள்ளடக்கப் பகுப்பாய்விற்குத் துணை நின்ற ஆய்வுக் கட்டுரைகளாக..

Tharumarajah.K Print media and agenda setting, A Comparative study of Jaffna newspaper's editorials;Proceeding of the full papers of Annual research Conference (ARC-2010) of University of Jaffna, என்ற ஆய்வில் உதயன், வலம்புரி ஆகிய இரு பத்திரிகைகளின் ஆசிரியத்தலையங்கங்களும் அரசியல் என்ற விடயத்துக்கே அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளதுடன் வலம்புரியை விட உதயன் பத்திரிகையே அதிகளவான அரசியல் சார் ஆசிரியத்தலையங்கங்களை எழுதியுள்ளன என்பதும் வலம்புரி அதிகளவில் பரந்துபட்டு

பல்வேறு விடயங்களுக்கு ஆசிரியத் தலையங்கத்தில் முக்கியத்துவம் கொடுத்துள்ளது என்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

Nnanyelugo okoro, analysis of Editorial discourse on environmental challenges in Nigerian Newspapers the case of 2012 flooding,Department of Mass Communication,University of Nigeria,Nsukka, என்ற ஆய்வில் சுற்றாடலில் காணப்படும் பிரச்சினைகளை எவ்வாறு பத்திரிகை பிரசுரங்கள் கையாண்டுள்ளன என்பதில் நைஜீரியாவில் வெள்ளம் ஏற்பட்டபொழுது பத்திரிகைகள் எவ்வாறு இப்பிரச்சினைகளை தமது பத்திரிகைகளில் கையாண்டுள்ளன என்பதையும் அவை தகவல்களை கையாண்ட விதம், தவறுகளை சுட்டிக்காட்டிய தன்மை, பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட திட்டமிடலுக்கான பங்களிப்பு, தீர்வுகள் வடிவமைக்கப்பட்ட விதம் என்பன ஆராயப்பட்டு கண்டறியப்பட்டன.. இதன் முடிவாக பத்திரிகைகள் ஒரு கட்டமைப்பான தீர்வுகளை சுற்றாடலின் ஸ்திரத்தன்மை பற்றி வெளியிடுவதை மேம்படுத்த வேண்டும் எனவும் முன்மொழியப்பட்டுள்ளது.

Jacob Smith, Editorial pages and the marketplace of ideas: A Quantitative content Analysis of three metropolitan Newspapers, Utah state University,Logan,Utah,2010 என்ற ஆய்வில் ஜனாதிபதி தேர்தல் காலங்களில் பத்திரிகைகளின் போக்கை அறிவதற்காக தேர்தல் பிரச்சாரங்களில் ஒருசில முக்கிய பிரச்சனைகளையா கருத்தில் எடுக்கின்றன என்பதற்கு முக்கிய மூன்று பத்திரிகைகள் ஆராயப்பட்டன. இதன் பெறுபேறுகள் குறிப்பாக விற்பனையினை காப்பாற்றுவதற்காகவே வடிமைக்கப்பட்டுள்ளது. என்ற விடயம் கண்டறியப்பட்டுள்ளது. ஒவ்வொரு பத்திரிகையும் பெரியளவான இடத்தை தேர்தல் தகவல்களிற்காக ஒதுக்கியதுடன் இரு பத்திரிகைகள் தேர்தல் பிரச்சார தகவல்களாகவே காணப்பட்டன. ஒரு பத்திரிகை மாத்திரமே ஸ்திரமான திட்டங்களிற்கான பிரச்சினைகளை ஆராய்ந்திருந்தார்கள் என்று கண்டறியப்பட்டுள்ளது.

Alowo maryian,News in the Ugandan press:The case of the new vision,Orebro University,என்ற ஆய்வில் மக்களிடையே பத்திரிகையின் மதிப்பை உருவாக்குவது அவற்றின் தகவல் அறிவிப்புஇ பொழுதுபோக்கு மற்றும் மக்களுடைய கடமையைஇ சக்தியை சமூகத்தில் ஏற்படுத்தி தெளிவுபடுத்தலாகும். உகண்டா பத்திரிகைகளில் மிக முக்கிய விடயமாக உள்ளக திட்டமிடலில் உள்நாட்டு அரசியல் காணப்படுவதுடன் நேர்மறையான படைப்புகள் மிக அரிதாக காணப்படுகின்றன. வுாந நேறள ஏளைழை பத்திரிகையின் ஆசிரியர்கள் அனுபவசாலிகளாகவுமஇ வயதானவர்களாகவும்இ நன்கு படித்தவர்களாகவும் காணப்படுகின்றனர். முடிவாக பத்திரிகைகளின் வெளியீடுகள் ஒரு படிமுறைக்கு உள்ளான பின்பே வெளியிட வேண்டும். அவையாவன தகவல் சேகரிப்பு, எழுத்தாற்றல், வடிவமைப்பு, மட்டுப்படுத்தல், காட்சிப்படுத்தல் போன்றனவாகும் என்றும் கூறப்பட்டுள்ளது.

**ஆய்வின் எல்லை**

அவ்வகையில் இலங்கையிலிருந்து வெளிவரும் தமிழத் தினசரிப் பத்திரிகைகளான **வீரகேசரி, தினகரன், தினக்குரல், சுடரொளி, உதயன், வலம்புரி, தினமுரசு** ஆகிய ஏழு பத்திரிகைகளின் ஆசிரியத் தலையங்கங்களும் ஆய்விற்காக எடுத்துக் கொள்ளப்பட்டதுடன் ஆடி 2013 தொடக்கம் மார்கழி 2013 வரையான ஆறு மாத காலப்பகுதிகளை ஆய்வின் எல்லையாக கொண்டே இவ் ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

| **காலப்பகுதி** | | **தேர்ந்தெடுத்தமைக்கான காரணம்** |
|---|---|---|
| ஆடி 2013 | : | வடமாகாண சபை தேர்தல். |
| ஆவணி 2013 | : | தேர்தல், நவநீதம்பிள்ளையின் வருகை. |

புரட்டாதி 2013 : தேர்தல், வாக்களிப்பும் அதன் பின்னரான செயற்பாடுகளும்.
ஐப்பசி 2013 : வடமாகாண சபையின் அதிகார நிலைப்பாடுகள்.
கார்த்திகை 2013 : பொதுநலவாய மாநாடு, கமரூன் வருகை.
மார்கழி 2013 : மனித உரிமைகள் மற்றும் காணாமல் போனோர் பற்றிய விடயங்கள்.

**ஆய்வு முறையியல்**

இலங்கையிலிருந்து வெளிவரும் தமிழ்த் தினசரிப் பத்திரிகைகளின் ஆசிரியத் தலையங்கங்கள் பற்றிய ஆய்வில் ஆசிரியத் தலையங்கப் பொருள், உத்திமுறைகள் என்பவற்றை கண்டறியும் பொருட்டு உள்ளடக்கப் பகுப்பாய்வு (Content analysis) முறையியலை பயன்படுத்தி இவ் ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

இவ் உள்ளடக்கப் பகுப்பாய்வில் அளவுசார் தரவுகளின் அடியாகவும், பண்புசார் தரவுகளின் அடியாகவும் தரவுகள், தகவல்கள் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. இவ் ஆய்விற்காக ஆடி 2013 தொடக்கம் மார்கழி 2013 வரையான ஆறு மாத காலப்பகுதிகளில் இலங்கையிலிருந்து வெளிவந்த பின்வரும் தமிழ்த் தினசரிப் பத்திரிகைகளின் **1295** ஆசிரியத்தலையங்கங்கள் ஆய்விற்காக எடுத்துக்கொள்ளப்பட்டன.

**அட்டவணை 01**

| இல | பத்திரிகைகள் | வெளியிடப்படும் இடம் | ஆசிரியத் தலைங்கங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | வீரகேசரி | கொழும்பு | 184 |
| 02 | தினகரன் | கொழும்பு | 184 |
| 03 | தினக்குரல் | கொழும்பு | 184 |
| 04 | சுடரொளி | கொழும்பு | 191 |
| 05 | உதயன் | யாழ்ப்பாணம் | 184 |
| 06 | வலம்புரி | யாழ்ப்பாணம் | 184 |
| 07 | தினமுரசு | யாழ்ப்பாணம் | 184 |

சுடரொளி பத்திரிகை மட்டும் 31/10/2013, 01/11/2013, 02.11.2013, 05/11/2013, 18/11/2013, 26/11/2013, 27/11/2013 ஆகிய ஏழு நாட்களிலும் இரு ஆசிரியத் தலையங்கங்களை பிரசுரித்துள்ளன என்பதனால் 191 ஆசிரியத்தலையங்கள் சுடரொளி பத்திரிகையில் மட்டும் இடம்பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

**அட்டவணை 02**




| இல | பத்திரிகைகள் | அரசியல் | தேர்தல் | இலங்கை இந்தியா தொடர்பானது | பொருளாதாரமும் அபிவிருத்தியும் | சமூகம் சார்ந்தவை | கலாசாரம் | சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் | ஞாபகமூட்டல் | பெண்கள் சிறுவர் | உணவு | விபத்து | ஊடகமும் தொழில் நுட்பமும் | கல்வி | சமயம் | குற்றமும் சட்டமும் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | வீரகேசரி | 73 | 39 | 9 | 8 | 3 | - | 0 | 5 | 0 | 3 | 0 | 3 | 1 | 11 | 29 |
| 2 | தினகரன் | 39 | 23 | 4 | 34 | 8 | 1 | 11 | 14 | 2 | 3 | 3 | 7 | 15 | 2 | 18 |
| 3 | தினக்குரல் | 51 | 33 | 8 | 8 | 13 | - | 12 | 11 | 6 | 4 | 1 | 5 | 5 | 1 | 26 |
| 4 | சுடரொளி | 76 | 28 | 16 | 3 | 4 | 5 | 3 | 10 | 2 | 2 | 2 | 4 | 1 | 6 | 29 |
| 5 | உதயன் | 74 | 21 | 8 | 9 | 5 | 1 | 3 | 10 | 3 | 1 | 0 | 6 | 5 | 9 | 29 |
| 6 | வலம்புரி | 63 | 39 | 5 | 7 | 10 | 7 | 4 | 5 | 0 | 1 | 3 | 1 | 9 | 11 | 19 |
| 7 | தினமுரசு | 74 | 48 | 7 | 0 | 8 | 1 | 9 | 5 | 5 | 0 | 0 | 13 | 8 | 1 | 7 |

**அட்டவணை 03**

ஆசிரியா் தலையங்கத்தில் அரசியல் சாா் தலையங்கங்களை அதிகூடியதாக சுடரொளி பத்திரிகையும் மிக குறைவாக தினகரன் பத்திரிகையும் வெளியிட்டுள்ளன. இவ்விடயம் சார்ந்து பிரசுரிக்கப்பட்ட ஆசிரியத்தலையங்கங்களின் எண்ணிக்கையின் இறங்குவரிசையாக சுடரொளி76 உதயன் தினமுரசு 74 வீரகேசரி 73 வலம்புரி 63 தினக்குரல் 51 தினகரன் 39 ஆசிரியத் தலையங்கங்களையும் எழுதியுள்ளன.

தேர்தல் தொடர்பாக தினமுரசு பத்திரிகை அதிகூடிய ஆசிரியத் தலையங்கங்களை எழுதியுள்ள அதேவேளை மிக குறைவாக எழுதியுள்ள உதயன் பத்திரிகை 21 தலையங்கங்களை எழுதியுள்ளது. இதில் தினமுரசு பத்திரிகை 48 ஆசிரியத் தலையங்கங்களையும் வலம்புரி வீரகேசரி ஆகிய இரண்டும் 39 ஆசிரியத் தலையங்கங்களையும் தினக்குரல் 33 ஆசிரியத் தலையங்கங்களையும் சுடரொளி 28 ஆசிரியத் தலையங்கங்களையும் தினகரன் 23 ஆசிரியத் தலையங்கங்களையும் எழுதிய அதேவேளை உதயன் 21 ஆசிரியத் தலையங்கங்களை தேர்தல் பற்றி எழுதியுள்ளது.

இலங்கை இந்தியா ஆகிய இரு நாடுகளையும் தொடர்புபடுத்தம் வகையில் அதிகூடிய ஆசிரியத்தலையங்கங்களை சுடரொளிப் பத்திரிகை எழுதியுள்ளதுடன் அதிகுறைந்ததாக தினகரன் பத்திரிகை இவ்விடயம் சார்ந்து எழுதியுள்ளது. சுடரொளி 16 வீரகேசரி 09 தினக்குரல் உதயன் ஆகிய இரண்டும் 8 தினமுரசு 7 வலம்புரி 5 தினகரன் 4 ஐயும் எழுதியுள்ளன.

பொருளாதாரமும் அபிவிருத்தியும் பற்றி தினகரன் பத்திரிகையே அதிகளவான ஆசிரியத் தலையங்கங்களை பிரசுரித்த வேளைடி மிகக் குறைவாக சுடரொளி பத்திரிகை பிரசுரித்துள்ளது. இவ்விடயம் சார்ந்து பிரசுரிக்கப்பட்ட ஆசிரியத்தலையங்கங்களின் எண்ணிக்கையின் இறங்குவரிசையாக தினகரன் 34 உதயன் 9 தினக்குரல் வீரகேசரி வலம்புரி ஆகிய மூன்றும் 7 ஆசிரியத் தலையங்கங்களை பிரசுரித்துள்ளன.இங்கு தினமுரசு இவ்விடயம் சார்ந்து எதனையும் பிரசுரிக்கவில்லை.

சமூகம் சார்ந்து எழுதப்பட்டவற்றுள் அதிகூடிய ஆசிரியத் தலையங்கங்களை தினக்குரல் பத்திரிகை பிரசுரித்த அதேவேளை அதி குறைந்ததாக வீரகேசரி பிரசுரித்துள்ளது. இவ்விடயம் சார்ந்து பிரசுரிக்கப்பட்ட ஆசிரியத்தலையங்கங்களின் எண்ணிக்கையின் இறங்குவரிசையாக தினக்குரல் பத்திரிகை 13ஐயும் வலம்புரி 10 ஐயும் தினமுரசு தினகரன் ஆகிய இரண்டும் 8 ஆசிரியத் தலையங்கங்களையும் உதயன் 5 சுடரொளி 4 வீரகேசரி 3ஐயும் எழுதி வெளியிட்டுள்ளன.

கலாசாரம் சார்ந்து எழுதப்பட்டவற்றுள் அதிகூடிய ஆசிரியத் தலையங்கங்களை வலம்புரியும் அதிகுறைந்ததாக தினகரன் உதயன் தினமுரசு ஆகியன எழுதியுள்ளன.வீரகேசரி தினக்குரல் ஆகிய இரண்டும் இவ்விடயம் சார்ந்து எந்தவொரு ஆசிரியத்தலையங்கங்களையும் எழுதவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இவ்விடயம் சார்ந்து பிரசுரிக்கப்பட்ட ஆசிரியத்தலையங்கங்களின் எண்ணிக்கையின் இறங்குவரிசையாக வலம்புரி 7 சுடரொளி 5 தினகரன் உதயன் தினமுரசு ஆகிய மூன்றும் 1 ஆசிரியத் தலையங்கங்களை பிரசுரித்த அதேவேளை வீரகேசரி தினக்குரல் ஆகிய இரண்டும் இவ்விடயம் சார்ந்து எந்தவொரு ஆசிரியத்தலையங்கங்களையும் எழுதவில்லை

சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்து எழுதப்பட்டவற்றுள் அதிகூடிய ஆசிரியத்தலையங்கங்களை தினக்குரல் பத்திரிகை வெளியிட்டதுடன் அதிகுறைந்தளவில் சுடரொளி உதயன் ஆகியன ஆசிரியத் தலையங்கங்களை எழுதியுள்ளன.ஆனால் வீரகேசரி இவ்விடயம் சார்ந்து எதனையும் எழுதவில்லை. இவ்விடயம் சார்ந்து பிரசுரிக்கப்பட்ட ஆசிரியத்தலையங்கங்களின் எண்ணிக்கையின் இறங்குவரிசையாக தினக்குரல் 12 தினகரன் 11

தினமுரசு 9 வலம்புரி 4 சுடரொளி உதயன் ஆகிய இரண்டும் 3 ஐயும் எழுதியுள்ள அதேவேளை வீரகேசரி இவ்விடயம் சார்ந்து எதனையும் எழுதவில்லை.

ஞாபகமூட்டல் என்ற விடயத்தில் தினகரன் பத்திரிகை அதிகூடிய ஆசிரியத்தலையங்கங்களை பிரசுரித்ததுடன் மிகக் குறைந்தளவில் வீரகேசரி வலம்புரி தினமுரசு ஆகியன பிரசுரித்துள்ளன. இவ்விடயம் சார்ந்து பிரசுரிக்கப்பட்ட ஆசிரியத்தலையங்கங்களின் எண்ணிக்கையின் இறங்குவரிசையாக தினகரன்- 14 தினக்குரல்- 11 சுடரொளி உதயன் 10 வீரகேசரி வலம்புரி தினமுரசு ஆகியன 5 ஆசிரியத் தலையங்கங்களை பிரசுரித்துள்ளன.

பெண்கள் மற்றும் சிறுவர் பற்றிய விடயங்களில் தினக்குரல் பத்திரிகை அதிகூடிய ஆசிரியத்தலையங்கங்களை பிரசுரித்ததுடன் தினகரன் சுடரொளி மிகக் குறைந்தளவில் ஆசிரியத்தலையங்கங்களை பிரசுரித்துள்ளன. ஆனால் வீரகேசரி வலம்புரி இவ்விடயம் சார்ந்து எதனையும் எழுதவில்லை. இவ்விடயம் சார்ந்து பிரசுரிக்கப்பட்ட ஆசிரியத்தலையங்கங்களின் எண்ணிக்கையின் இறங்குவரிசையாக தினக்குரல் 6 தினமுரசு 5 உதயன் 3 தினகரன் சுடரொளி 2 எழுதியுள்ளதுடன் வீரகேசரி வலம்புரி இவ்விடயம் சார்ந்து எதனையும் எழுதவில்லை.

உணவு என்ற விடயம் சார்ந்து தினக்குரல் பத்திரிகையே அதிகூடிய ஆசிரியத்தலையங்கங்களை பிரசுரித்த அதேவேளை மிகக் குறைந்தளவில் உதயன் வலம்புரி என்பன வெளியிட்டுள்ளன.ஆனால் தினமுரசு இவ்விடயம் சார்ந்து எதனையும் எழுதவில்லை. இவ்விடயம் சார்ந்து பிரசுரிக்கப்பட்ட ஆசிரியத்தலையங்கங்களின் எண்ணிக்கையின் இறங்குவரிசையாக தினக்குரல் 4 வீரகேசரி தினகரன் 3 சுடரொளி 2 உதயன் வலம்புரி 1 ஐயும் பிரசுரித்ததுடன் தினமுரசு இவ்விடயம் சார்ந்து எதனையும் எழுதவில்லை.

விபத்து பற்றிய விடயத்தில் தினகரன் வலம்புரி ஆகிய இரண்டுமே அதிகூடிய ஆசிரியத்தலையங்கங்களை பிரசுரித்த அதேவேளை தினக்குரல் மிகக் குறைந்தளவில் ஆசிரியத்தலையங்கங்களை பிரசுரித்துள்ளன. வீரகேசரி உதயன் தினமுரசு ஆகிய மூன்றும் இவ்விடயம் சார்ந்து எதனையும் எழுதவில்லை. இவ்விடயம் சார்ந்து பிரசுரிக்கப்பட்ட ஆசிரியத்தலையங்கங்களின் எண்ணிக்கையின் இறங்குவரிசையாக தினகரன் வலம்புரி 3 சுடரொளி 2 தினக்குரல் 1 ஐயும் எழுதியுள்ள அதேவேளை வீரகேசரி உதயன் தினமுரசு ஆகியன இவ்விடயம் சார்ந்து எதனையும் எழுதவில்லை.

ஊடகமும் தொழில்நுட்பமும் என்ற விடயம் பற்றி தினமுரசு அதிகூடிய ஆசிரியத்தலையங்கங்களை எழுதியுள்ள அதேவேளை மிகக் குறைந்ததாக வலம்புரி எழுதியுள்ளது. இவ்விடயம் சார்ந்து பிரசுரிக்கப்பட்ட ஆசிரியத்தலையங்கங்களின் எண்ணிக்கையின் இறங்குவரிசையாக தினமுரசு 13 தினகரன் 7 உதயன் 6 தினக்குரல் 5 சுடரொளி 4 வீரகேசரி 3 வலம்புரி 1 ஐயும் எழுதியுள்ளன.

கல்வி பற்றிய விடயத்தில் அதிகூடிய ஆசிரியத்தலையங்கங்களை தினகரனும் மிகக்குறைந்த ஆசிரியத்தலையங்கங்களை வீரகேசரி சுடரொளி ஆகியனவும் வெளியிட்டுள்ளன. இவ்விடயம் சார்ந்து பிரசுரிக்கப்பட்ட ஆசிரியத்தலையங்கங்களின் எண்ணிக்கையின் இறங்குவரிசையாக தினகரன் 15 வலம்புரி 9 தினமுரசு 8 தினக்குரல் 5 வீரகேசரி சுடரொளி ஆகிய இரண்டும் 1 ஆசிரியத் தலையங்கங்களை எழுதியுள்ளன.

சமயம் பற்றிய விடயத்தில் வீரகேசரி வலம்புரி ஆகிய இரண்டும் அதிகூடிய ஆசிரியத் தலையங்கங்களை பிரசுரித்த அதேவேளை மிகக் குறைந்தளவில் தினக்குரல் மற்றும் தினமுரசு எழுதியுள்ளன. இவ்விடயம் சார்ந்து பிரசுரிக்கப்பட்ட ஆசிரியத்தலையங்கங்களின் எண்ணிக்கையின் இறங்குவரிசையாக வீரகேசரி வலம்புரி ஆகிய

இரண்டும் 11 உதயன் 9 சுடரொளி 6 தினகரன் 2 தினக்குரல் தினமுரசு ஆகிய இரண்டும் 1 ஆசிரியத் தலையங்கங்களையும் பிரசுரித்துள்ளன.

குற்றமும் சட்டமும் பற்றிய விடயத்தில் வீரகேசரி சுடரொளி உதயன் ஆகிய மூன்றும் அதிகூடிய ஆசிரியத்தலையங்கங்களைப் பிரசுரித்ததுடன் மிகக் குறைந்தளவில் தினமுரசுப் பத்திரிகை பிரசுரித்துள்ளது. இவ்விடயம் சார்ந்து பிரசுரிக்கப்பட்ட ஆசிரியத்தலையங்கங்களின் எண்ணிக்கையின் இறங்குவரிசையாக வீரகேசரி சுடரொளி உதயன் 29 ஐயும் தினக்குரல் 26 வலம்புரி 19 தினகரன் 18 தினமுரசு 7 ஆசிரியத் தலையங்கங்களையும் பிரசுரித்துள்ளன என்பது குறிப்பிடத் தக்கது.

**உத்திமுறைகள்**

ஆசிரியத் தலையங்கம் எவ்வாறு எந்த அமைப்பில் அல்லது எந்த நடையில் எழுதப்பட வேண்டும் என்பதற்கு எந்த ஒரு வரன்முறையும் இல்லை. ஏனெனில் ஆசிரியத் தலையங்கம் மக்கள் கருத்தை உருவாக்கும் ஒரு கருத்துக்கள பகுதியாக இருப்பதால் பத்திரிகையின் பிற பகுதிகளை விட இப்பகுதி வேறுபடுகின்றது. எனவே ஆசிரியர் தான் விரும்பிய உத்திமுறைகளை பாவித்து வாசகர்களின் கவனத்தை ஈர்க்க ஆசிரியத் தலையங்க நடையை மாற்றிக் கொள்ளலாம். பத்திரிகை ஆசிரியரின் கருத்தும் பத்திரிகை நிறுவனத்தின் கருத்தும் ஒருபோதும் மாறுபடாது என்பதுடன் ஆசிரியர் தான் விளக்க எடுத்துக்கொண்ட பொருளுக்கு ஏற்ற பொருத்தமான நடையையும் உத்தியையும் பயன்படுத்தலாம் அதற்கான முழுச்சுதந்திரமும் ஆசிரியருக்கு உண்டு.

1. **வீரகேசரிப் பத்திரிகையில் ஆசிரியர் தலையங்கத்தில் கையாளப்பட்ட உத்தி முறைகள்**
    1. தகவல் மூல அடிப்படையில் விளக்கல்
    2. வரலாற்றுப் போக்கை குறிப்பிடுதல்
2. **தினகரன் பத்திரிகையில் ஆசிரியத் தலையங்கத்தில் கையாளப்பட்ட உத்தி முறைகள்**
    1. தகவல் மூல அடிப்படையில் விளக்கல்

       வரலாற்றுப்போக்கு

       உவமைகள் கையாளப்பட்டுள்ளன
    2. விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையானவை
3. **தினக்குரல் பத்திரிகையில் ஆசிரியர் தலையங்கத்தில் கையாளப்பட்ட உத்தி முறைகள்**
    1. உவமை கையாளப்பட்டுள்ளமை
    2. திருக்குறள் பாவிக்கப்பட்டுள்ளமை
    3. கிளைக்கதை
    4. பொன்மொழி
4. **சுடரொளி பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்தில் கையாளப்பட்ட உத்தி முறைகள்**
    1. பழமொழிகள் கையாளப்பட்டுள்ளமை
    2. உவமை கையாளப்பட்டுள்ளமை
    3. விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையானவை
5. **உதயன் பத்திரிகையில் ஆசிரியர் தலையங்கத்தில் கையாளப்பட்ட உத்தி முறைகள்**

1. உவமை கையாளப்பட்டுள்ளது
2. பாரதியின் கூற்றுக்கள் பயன்படுத்தல்

6. **வலம்புரி பத்திரிகையில் ஆசிரியர் தலையங்கத்தில் கையாளப்பட்ட உத்தி முறைகள்**
   1. நகைச்சுவை பாவிக்கப்பட்டுள்ளமை
   2. கிளைக்கதை பாவிக்கப்பட்டுள்ளமை
   3. கனவு காண்பது போன்ற உரையாடல்
   4. வேண்டுகோள் விடுப்பது போன்றும் எழுதப்பட்டுள்ளன.

7. **தினமுரசு பத்திரிகையில் ஆசிரியர் தலையங்கத்தில் கையாளப்பட்ட உத்தி முறைகள்**
   1. அறிஞரின் கருத்து
   2. திரைப்பட பாடல் வரிகள்

## முடிவு

இவ் ஆய்விலிருந்து இலங்கை தமிழ்த் தினசரிப் பத்திரிகைகள் அனைத்துமே ஆசிரியத் தலையங்கப் பொருள்பற்றிய விடயத்தில் அரசியலுக்கே அதிக முக்கியத்தவம் கொடுத்து ஆசிரியத் தலையங்கங்களை எழுதியுள்ளன. அடுத்து உத்தி முறைகளை நோக்கும் போது ஒவ்வொரு பத்திரிகையும் தமக்கென தனித்துவ உத்திகளை கையாளும் அதேவேளை வலம்புரி பத்தரிகையே தன் ஆசிரியத் தலையங்கங்களில் பல வகையான உத்திமுறைகளை கையாண்டுள்ளமையை அவதானிக்க முடிகின்றது. அத்துடன் ஆசிரியத்தலையங்கங்களின் வடிவமைப்பு மற்றும் உத்திமுறைகளின் ஊடாக பத்திரிகைகள் கருத்துருவாக்கப் பணிகளையும் மேற்கொள்வதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கையிலிருந்து வெளிவரும் தமிழ்த் தினசரிப் பத்திரிகைகளில் ஆசிரியத் தலையங்கம் பற்றிய இவ் ஆய்வானது இலங்கையில் பத்திரிகைகள் பற்றிய ஆய்வை மேற்கொள்பவர்களுக்கு வழிகாட்டியாக அமைவதுடன் இவை தொடர்பாக மேலும் ஆய்வுகளை மேற்கொள்ள துணைபுரியும்.

**உசாத்துணை**

01) மா.ரா.இளங்கோவன், 1981 இதழியல் நோக்கு இசேகர் பதிப்பகம்இ சென்னை

02) அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை ,2011 ஆசிரியத் தலையங்கம் ஓர்அறிமுகம்" பிசப்சவுந்தரம் மீடியா சென்ரர் யாழ்ப்பாணம்

03) ம.லெனின் 2006 "எல்லாம் தரும் இதழியல்" வானவில் புத்தகாலயம் சென்னை

04) டாக்டர் அ.சிவக்கண்ணன் 1985 "தமிழ் இதழ்களில் சமுதாய உணர்வு" மதுரா பதிப்பகம் மதுரை

05) டாக்டர் தங்கமணியன் 1998 "பத்திரிகையியல்" மைசூர்ப் பல்கலைக்கழகம் மைசூர்

06) Thomas Rolnicki , 2007 "Scholastical Journalism" Edition-11,black wel publishing limited,UK,